முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Provincial Department of Education - NWP**

**தரம் 10**

**மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)**

**குடியியற்கல்வி**

சுட்டெண்: ..............................

**நேரம் :- 3 மணி.**

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

## பகுதி – I

**கவனிக்க**

- **எல்லா வினாக்கருக்கும் விடை எழுதுக.**
  **இலக்கம் 01- 40 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (x) இடையாளமிடுக.**
- **மிகச்சரியான விடையினைத் தெரிவு செய்க.**

1. உலக ஆரம்ப முதல் ஜனநாயக ஆட்சி முறையில் காணப்படும் முக்கியமான அம்சமாக கருதக்கூடியது,
   1) பிரசைகள் 2) மக்கள் பிரதிநிதிகள்
   3) ஜனாதிபதியும் நிறைவேற்றுத்துறவும் 4) பாராளுமன்றம்

2. கிரேக்கத்தில் ஏதென்ஸ் நகர சனநாயக ஆட்சியில் காணப்பட்ட முக்கிய அம்சம் எது?
   1) நிருவாக விடயங்கள் மன்னனால் மேற்கொள்ளப்பட்டமை.
   2) கிரேக்கத்தில் வெளிநாட்டவர்கள் நிருவகிக்கக்கூடியவாறு ஆட்சியதிகாரம் இருந்தமை.
   3) பிரதான ஆட்சி நிறுவனமாக மக்கள் மன்றம் காணப்பட்டமை.
   4) மக்கள் மூலமாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நிருவாக விடயங்களுக்கு நேரடியாக பங்கு கொண்டமை.

3. நேரடி ஜனநாயக ஆட்சி முறையினை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் பிரச்சினைகள் உள்ளன. பின்வருவனவற்றிலிருந்து அப்பிரச்சினையை தெரிவு செய்க.
   1) மனிதர்களுக்கு இலகுவான தேவைகள் காணப்படுகின்றமை.
   2) தற்கால அரசுகளின் நிலப்பரப்பு விசாலமானதாக காணப்படுதல்.
   3) எல்லா பிரசைகளையும் ஓரிடத்தில் நின்று திரட்டுவதற்கு முடிதல்.
   4) அரசுகள் குறைவான சனத்தொகையை கொண்டிருத்தல்.

4. சனநாயக ஆட்சி அனைவரது உரிமையும் பெற்றுக்கொள்ளும் ஆட்சி முறை என கூறியவர்,
   1) ஆபிரகாம் லிங்கன் 2) அரிஸ்டோட்டில்
   3) காணர் 4) சீலர்

5. நிர்வாக முறைக்கு ஜனநாயக ஆட்சி முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட காரணம்,
   1) அது தேவையான கௌரவத்தைப் பெற்றுள்ளமை.
   2) அது கலந்துரையாடல் மூலம் தீர்மானத்துக்கு வர முடிகின்றமை.
   3) அரசாங்க அதிகாரம் மக்கள் விருப்பின் பேரில் தெரிவாகும் கட்சியின் அபேட்சகருக்காக காணப்படுகின்றன.
   4) அது நடுநிலைத் தன்மை பேணப்படுவதாகும்

6. வடமேல் மாகாணத்திற்குரிய தேர்தல் மாவட்டங்கள் இரண்டைக் கொண்ட தொகுதி
   1) குருநாகல், குளியாப்பிடிய
   2) குருநாகல், புத்தளம்
   3) புத்தளம், சிலாபம்
   4) புத்தளம், குளியாப்பிட்டிய

7. சனநாயக சமூகத்தின் நடைமுறைக்காக சுதந்திர ஊடகங்களால் நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்களில் ஒன்று,
   1) மக்களின் துயரங்களை வெளிப்படுத்துவதன் மூலம் பிரபல்யமாக இருத்தல்.
   2) பக்கச்சார்பானதும் சமூகத்துக்கு தீங்கான செய்திகளை வழங்குதல்.
   3) ஆட்சியாளர்களைச் சனநாயக வழியில் இட்டுச்செல்லல்.
   4) உண்மையற்ற, நேர்மையில்லாத தகவல்களை மக்களுக்கு வழங்குதல்.

- **பின்வரும் கூற்றுக்களை வைத்து 8,9ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - சட்டத்துறை மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படல்
B - சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறைக்கு இடையே நேரடி தொடர்பு காணப்படல்.
C - நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாக கட்டுப்பட வேண்டியதில்லை.
D - நிறைவேற்றுத்துறை இயக்குவது ஜனாதிபதியாகும்.
E - நிறைவேற்றுத்துறை அதிகாரத்தை இயக்குவது ஜனாதிபதியும் பிரதமரும் கொண்ட கெபினட் ஆகும்.

8. மேலுள்ள கூற்றில் ‘‘கெபினட்’’ அரசாங்கத்துக்கு மாத்திரம் பொருத்தமான கூற்று,
   1) AB    2) CD    3) AE    4) CE

9. மேலே குறிப்பிட்ட கூற்றில் ஜனாதிபதி அரசாங்கத்துக்குரிய அம்சமாக கூறும் கூற்றாக இருப்பது,
   1) AB    2) CD    3) AE    4) CE

10. சனநாயக ஆட்சிமுறை காணப்படும் நாடுகளில் மக்களுக்கு தமது இயலுமையை நிரூபிக்கக் கூடிய முக்கிய அம்சமாக இருப்பது,
   1) தாங்கள் விரும்பும் கட்சியின் அபேட்சகரை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்படல்
   2) தமது பிரதேச தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிதல்
   3) மக்களுக்கு நலன் மிக்க அரசாங்கத்தை தெரிவு செய்சதற்கான சந்தர்ப்பம் உருவாதல்.
   4) ஒவ்வொருவரின் சுயலாபத்தை ஈட்டுவதற்கு உறுப்பினர்களை தெரிவு செய்ய முடிதல்.

11. மத்திய அரசாங்கத்திடம் உள்ள நிருவாக அதிகாரங்களில் ஒரு சிலவற்றை பிராந்திய அலகுகளுக்கு வழங்குவதை அழைப்பது,
   1) அதிகார பிரிப்பு
   2) அதிகார திருத்தம்
   3) அதிகாரம் வழங்கள்
   4) அதிகாரம் பன்முகப்படுத்தல்

- **பின்வரும் கூற்றுக்களை வைத்து 12, 13ம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

A - எழுதப்பட்ட அரசியல் யாப்பு காணப்படல்
B - அரசாங்கத்துக்குரிய அதிகாரங்களை ஒரு மத்திய அரசினால் நிருவகிக்கப்படுதல்
C - நிர்வாக அதிகாரம் மத்திய அரசின் சட்டத்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத்தால் மாத்திரம் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்
D - அரசியல் யாப்புக்கு விளக்கமளிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்

12. சமஷ்டி அரசாங்கமொன்றில் பண்புகளைக் கொண்ட விடைத்தொகுதியை தெரிவு செய்க.
1) AB 2) BC 3) CD 4) AD

13. ஒற்றையாட்சிக்குரிய பண்புகளைக் கொண்ட விடைத்தொகுதி,
1) AB 2) BC 3) CD 4) AD

14. 1987 ஆண்டு 15ம் இலக்க சட்டத்தின் படி உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற அமைப்பு,
1) மாநகர சபை 2) பிரதேச சபை 3) நகர சபை 4) மாகாண சபை

15. ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் முதலமைச்சர் உட்பட எத்தனை அமைச்சர்கள் அமைய வேண்டும்,
1) 4 போர் 2) 5 பேர் 3) 6 பேர் 4) 3 பேர்

16. சுவிட்ஸ்சர்லாந்தில் ''கென்ரன்'' என்ற பெயரில் அழைக்கப்படும் அமைப்பு யாது,
1) அந்நாட்டு பாராளுமன்றம் 2) அந்நாட்டு மாநிலம்
3) அந்நாட்டு நீதிமன்றம் 4) அந்நாட்டு ஜனாதிபதி

17. உலகின் பலமான சமஷ்டி அரசாங்கத்தைக் கொண்ட அமெரிக்காவில் ஆரம்ப குடியேற்றமும், தற்போதுள்ள மாநிலங்களையும் கொண்ட விடைத்தொகுதியை தெரிவு செய்க.
1) குடியேற்றம் 13ம், தற்போதைய மாநிலங்கள் 50 ஆகும்.
2) குடியேற்றம் 50ம், தற்போதைய மாநிலங்கள் 13 ஆகும்.
3) குடியேற்றம் 26ம், தற்போதைய மாநிலங்கள் 30 ஆகும்.
4) குடியேற்றம் 13ம், தற்போதைய மாநிலங்கள் 52 ஆகும்.

- **கீழுள்ளவற்றிலிருந்து 18, 19ம் வினாக்களுக்கு விடையினை குறிப்பிடுக.**

A - கல்வி B - சுகாதாரம்
C - நிதிவிடயங்கள் D - தேசிய பாதுகாப்பு

18. மேலுள்ள விடயங்களில் மாநிலங்களுக்குரிய அதிகாரங்களைக் கொண்ட விடையாக அமைவது,
1) AB 2) BC 3) CD 4) AC

19. மேலுள்ள விடயங்களில் மத்திய அரசுக்குரிய அதிகாரங்களைக் கொண்ட விடையாக அமைவது,
1) AB 2) BC 3) CD 4) AC

20. இலங்கை போன்ற நாடுகளில் நல்லாட்சி சிறப்பாக அமையாதமைக்கான காரணம் யாது?
1) தேவையான அளவு அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்
2) அரச நிர்வாக சிறப்பானதாக காணப்படல்
3) அரச சேவை அரசியல் மயப்படுத்தப்பட்டிருத்தல்
4) ஊழல், முறைகேடுகள் இல்லாதிருத்தல்

21. முதலீட்டு நுட்பம், உழைப்பு நுட்பம் என்பது,
1) உற்பத்தி செய்வது எத்துறையினால் என ஆராய்தல்
2) உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தப்படும் நுட்பங்கள்
3) உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தப்படும் உற்பத்தி செயல்முறைகள்
4) உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தும் உள்ளீடுகளாகும்.

22. ஏதாவதொரு பொருள் உற்பத்தி செய்யும் போது பயன்படுத்தும் பொருள் அழைக்கப்படுவது,
1) நுகர்வு பொருட்கள் 2) முதலீட்டுப் பொருட்கள்
3) ஆடம்பர பொருட்கள் 4) இடைநிலைப்பொருட்கள்

- **கீழ்வரும் கூற்றுக்களை வாசித்து 23, 24ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - வெளிநாட்டு முதலீடுகள், புதிய தொழில்நுட்பங்கள் உள்வருகை
B - கைத்தொழில் நிறுவனங்களால் ஏற்படுத்தப்படும் சுற்றாடல் பாதிப்பு
C - மூளைசாலிகளின் வெளியேற்றம்
D - தேசிய உற்பத்திக் காரணிகளுக்கு அதிக கேள்வி உருவாதல்

23. உலகமயமாதல் காரணமாக இலங்கை மீது ஏற்படுத்தியுள்ள சாதகமான தாக்கங்களைக் கொண்ட விடை,
1) AB 2) BC 3) CD 4) AD

24. உலகமயமாதல் காரணமாக இலங்கை மீது ஏற்படுத்தியுள்ள பாதகமான தாக்கங்களைக் கொண்ட விடை,
1) AB 2) BC 3) CD 4) AD

25. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக (SAPTA) உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்ட நாடுகளை இனங்காண்க.
1) இலங்கை, இந்தியா 2) இலங்கை, அமெரிக்கா
3) இலங்கை, இங்கிலாந்து 4) இலங்கை, ஜப்பான்

26. நிலையான அபிவிருத்தியின் போது அதிகமாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களைக் கொண்ட விடைத்தொகுதி,
A - எதிர்கால சந்ததியினருடன் ஒன்றிணைந்து இருத்தல்
B - இயற்கை வளங்களை பாதுகாத்தல்
C - சுற்றாடலைப் பாதுகாத்து பராமரித்தல்
D - இன்று உள்ள வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தல்
1) ABC 2) BCD 3) CDA 4) ABD

- **கீழுள்ள கூற்றுக்களில் இருந்து 27, 28, 29ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - அரச துறை கணிய வளம் உற்பத்தி செய்தல்
B - ஆடைக்கைத்தொழில்
C - தொலைபேசி சேவை
D - பொது போக்குரத்து
E - தனியார் கல்வி
F - அரச துறை கல்வி

27. பொருட்கள் சேவைகளை அரசவுடமையாகக் கொண்டு இயங்கும் துறைகள் எவை?
1) AB 2) CD 3) BE 4) AF

28. பொருட்கள் சேவைகள் தனியார் உடமையாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடும் துறைகள் எவை,
1) AB 2) CD 3) BE 4) AF

29. பொருட்கள் சேவைகள் அரச உடமையாகக் கொண்டும், தனியார் உடமையாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடும் துறைகள்,
1) AB 2) CD 3) BE 4) AF

30. கீழ்வரும் அட்டவணையை வைத்து ''அ'' பகுதிக்கு பொருத்தக்கூடிய விடையை ''ஆ'' பகுதியிலிருந்து தெரிந்து விடையளிக்குக.

| அ | ஆ |
|---|---|
| 1. மனிதன் உயிர்வாழ அத்தியவசியமாக தேவைப்படும் அடிப்படை விடயங்கள் | A. கல்வி சுகாதாரம், ஆடை அணிகள், வாகனங்கள் |
| 2. மனித தேவைகளும், விடுப்பங்களும் நிவர்த்தி செய்ய பயன்படுத்தும் விடயங்கள் | B. உணவு, வீடு, ஆடைஅணிகள் |
| 3. உற்பத்தி செயல் முறையில் நேரடியாக பயன்படும் மூலதன பொருட்கள் | C. இயந்திரங்கள், கட்டிடங்கள், மூலப்பொருட்கள் |

1) ABC 2) ACB 3) BCA 4) BAC

- **கீழ் உள்ள கூற்றுக்களில் இருந்து 31, 32, 33ம் வினாக்களுக்கு விடை தருக.**

A - சட்டத்துக்கு ஒப்புதல் அளித்தல்

B - பொறுப்பினை நிறைவேற்றுதல்

C - சட்டத்தை நடைமுறைப்படுத்தல்

D - நிதி நிர்வாகம்

E - மனித உரிமைகளை பாதுகாத்தல்

F - அரச ஊழியர்களை நிர்வாகித்தல்

31. நவீன அரசில் சட்டத்துறைக்குரிய செயற்பாடாகக் கூறக்கூடிய விடையை தெரிவு செய்க.
1) AD 2) BE 3) CF 4) DF

32. நவீன அரசில் நிறைவேற்றுத்துறைக்குரிய செயற்பாடாகக் கூறக்கூடிய விடையை தெரிவு செய்க.
1) AD 2) BE 3) CF 4) DF

33. நவீன அரசில் நீதித்துறைக்குரிய கடமைப்பட்டியலை கூறும் விடயம் எது,
1) AD 2) BE 3) CF 4) DF

34. மோதலின் வகைகளை இரு பிரதான பகுதிகளாக பிரிக்கலாம். அவை இரண்டையம் குறிப்பிடும் விடையை தெரிவு செய்க.
1) வெளிப்படையான மோதல், உள்ளக மோதல்
2) உள்ளக மோதல், சர்வதேச மோதல்
3) கொள்ளை ரீதியான மோதல், சர்வதேச மோதல்
4) யுத்த ரீதியான மோதல், கொள்கை ரீதியான மோதல்

35. ஒரு நாட்டில் வாழுகின்ற மக்களிடையே ஏற்படும் தனி, சமூக மோதலை எவ்வாறு அழைக்கப்படும்,
1) வெளிப்படையான மோதல், நுண்மையான மோதல்
2) உள்ளக மோதல், நாடுகளுக்கிடையிலான மோதல்
3) கொள்கை மோதல், யுத்த மோதல்
4) உள் மோதல், வெளி மோதல்

36. பிரச்சினையுடன் தொடர்பான தரப்பினர் நேரடியாகவோ மத்தியஸ்தர்கள் ஊடாகவோ கலந்துரையாடுவதன் மூலம் இரு தரப்பினருக்கும் வெற்றி வெற்றி எனும் தீர்வை பெறக்கூடிய முறை எவ்வாறு அழைக்கப்படும்,

1) நடுநிலையாளராகத்தலையிடல்
2) பேரம் பேசுதல்
3) இணக்கப்பாடு
4) கலந்துரையாடல்

37. பிரச்சினையைத் தீர்க்கின்ற ஒரு மரபுவழிச்செயற்பாடாக கூறக்கூடியது,

1) ஆலோசனை வழங்கல்
2) பேரம் பேசுதல்
3) உடன்படல்
4) தீர்ப்புக்கூறல்

38. மோதலை அல்லது முரண்பாட்டை தீர்ப்பதற்கான சிறப்பான வழி எது,

1) காப்பாற்றுதல்
2) தீர்ப்பு கூறல்
3) இணக்கப்பாடு
4) உடன்படல்

39. தொழிலாளர்களிடையே தொழில் ரீதியான மோதல் ஏற்படும் பட்சத்தில் தீர்க்க பயன்படும் முறையாக,

1) கலந்துரையாடல்
2) தீர்ப்பு கூறல்
3) நடுநிலைமையாளராகச் செயற்படல்
4) பேச்சு வார்த்தையும் பேரம் பேசுதலும்

40. உலக அளவில் மிகவும் பயங்கரமான யுத்தமாக கருதக்கூடியது,

1) அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம்
2) ரஷ்யாவுக்கும், யுக்ரேனுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம்
3) முதலாம், இரண்டாம் உலா மகா யுத்தங்கள்
4) ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம்

**Civics Grade – 10 Part II**

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**Provincial Department of Education - NWP**

**தரம் 10**

**மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)**

**குடியியற்கல்வி**

சுட்டெண்: ..............................

**பகுதி II**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவுடன் சேர்த்து மொத்தம் 5 வினாக்களுக்கு விடையளிக்குக.**

1. i) ஜனநாயக ஆட்சி முறையின் இரண்டு பகுதிகளும் எவை?
   ii) நவீன ஜனநாயகமிக்க ஒரு நாட்டின் பிரசை ஒருவர் கொண்டுள்ள கடமைகள் 2 தருக.
   iii) அதிகாரம் பன்முகப்படுத்தல் என்றால் என்ன?
   iv) அதிகாரத்தின் வகைகளைக் குறிப்பிடுக.
   v) பொருளாதார பண்டம், பொருளாதரமல்லாத பண்டம் என்பவற்றுக்கு இரு உதாரணம் வீதம் குறிப்பிடுக.
   vi) இலங்கையில் காணக்கூடிய கலாசாரங்களில் இரண்டைத் தருக.
   vii) உலகில் காணக்கூடிய இரு பொருளாதார முறைகளைக் குறிப்பிடுக.
   viii) அபிவிருத்தி என்பது பல கருத்துக்களைக் கொண்டது. அவற்றில் இரண்டினைக் கூறுக.
   ix) மோதலை ஏற்படுத்தக்கூடிய பல தரப்புகள் உள்ளன. அவற்றில் இரண்டினை கூறுக.
   x) ஜொஹான் கல்டுன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மோதல் முக்கோண மாதிரியில் அடங்கும் கூறுகளுல் இரண்டைக் குறிப்பிடுக.

   (பு - 20)

2. மகிழ்ச்சிகரமானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை நோக்காகக் கொண்ட அமைப்பே அரசாகும்.
   i) அரசு தொடர்பாக வரைவிலக்கணங்கள் வழங்கிய இரு நபர்களைக் குறிப்பிடுக. (பு - 2)
   ii) அரசு ஒன்றில் காணக்கூடிய மூலக்கூறுகளில் மூன்றைக் குறிப்பிடுக. (பு - 3)
   iii) a) தேசிய அரசுகளின் பிரதான பண்புகளில் மூன்றைக் குறிப்பிடுக. (பு - 3)
   b) அதில் ஒன்றை விரிவுப்படுத்தி எழுதுக. (பு - 2)

3. மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது பிரதிநிதித்துவ முறையும், அரசியல் கட்சி முறையும் முக்கியமானவை.
   i) மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் முறைகள் 2 தருக. (பு - 2)
   ii) கட்சிகள் மூன்று வகையாக பாகுபடுத்தலாம். அவற்றினை குறிப்பிடுக. (பு - 3)
   iii) a) அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் மூன்றினைத் தருக. (பு - 3)
   b) அவற்றில் ஒன்றினைப்பற்றி விளக்குக. (பு - 2)

4. சமஷ்டி அரசினதும், ஒற்றையாட்சி அரசினதும் பிரதேச நிர்வாகத்தை கொண்டு நடாத்துவதற்கு பிரதேச அலகுகளுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

i) இலங்கையில் புராதன காலத்திலிருந்து அதிகாரம் பரவலாக்கம் செய்யப்பட்டிருந்தது. அவற்றில் 2 உதாரணங்களைத் தருக. (பு - 2)

ii) இலங்கையில் அதிகாரம் பரவலாக்கத்தினை 13வது அரசியலில் யாப்பின் சீர்திருத்தத்தின் படி மூன்று நிரல்களின் அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவை எவை? (பு - 3)

iii) a) ஆளுநரின் அதிகாரங்களும், பணிகளும் மூன்று தருக. (பு - 3)

b) இதில் ஒன்றை விளக்கி எழுதுக. (பு - 2)

5. உலகில் பன்மை கலாசாரங்களைக் கொண்ட நாடுகளே அதிகமாக உள்ளன.

i) இலங்கையில் பன்மை கலாசார உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் 2 தருக. (பு - 2)

ii) பன்மை பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக. (பு - 3)

iii) a) பன்மை கலாசார சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதனால் ஏற்படும் நன்மைகள் 3 குறிப்பிடுக. (பு - 3)

b) அதில் ஒன்றை விரிவுபடுத்தி எழுதுக. (பு - 2)

6. ஒவ்வொரு உற்பத்தியிச் செயல்களிலும் வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

i) உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்தும் உற்பத்தி காரணிகளில் இரண்டை குறிப்பிடுக. (பு - 2)

ii) அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகள் மூன்றையும் குறிப்பிடுக. (பு - 3)

iii) a) பொருளாதாரம் ஒன்றின் பிரதான செயற்பாடுகள் மூன்றும் எவை? (பு - 3)

b) அதில் ஒன்றை பற்றி விரிவாக்கி எழுதுக. (பு - 2)

7. ‘‘எல்லாச் சமூகத்திலும் மோதல் பொதுவானது. இது வேற்றுமையின் பிரதிபலிப்பாக உள்ளமையாகும்.’’

i) மோதல் ஏற்படுவதற்கான அடிப்படை காரணங்கள் 2 தருக. (பு - 2)

ii) நடு நிலையாளரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் 3 தருக. (பு - 3)

iii) a) மோதல்களை சமாதானமாகத் தீர்ப்பதால் ஏற்படும் பயன்கள் 3 தருக. (பு - 3)

b) அதில் ஒன்றை சுருக்கமாக எழுதுக. (பு - 2)

PAST PAPERS WIKI



WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

# வடமேல் மாகணக் கல்வித் திணைக்களம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை- 2022
## குடியியற்கல்வி
## தரம் - 10
## விடைகள்

## பகுதி - I

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 11 | 4 | 21 | 2 | 31 | 1 |
| 2 | 3 | 12 | 4 | 22 | 4 | 32 | 3 |
| 3 | 2 | 13 | 2 | 23 | 4 | 33 | 2 |
| 4 | 4 | 14 | 3 | 24 | 2 | 34 | 2 |
| 5 | 3 | 15 | 1 | 25 | 1 | 35 | 1 |
| 6 | 2 | 16 | 2 | 26 | 1 | 36 | 4 |
| 7 | 3 | 17 | 1 | 27 | 4 | 37 | 4 |
| 8 | 1 | 18 | 1 | 28 | 3 | 38 | 3 |
| 9 | 2 | 19 | 3 | 29 | 4 | 39 | 4 |
| 10 | 3 | 20 | 3 | 30 | 4 | 40 | 3 |

## பகுதி – II

1. i) நேரடியான சனநாயகம், மறைமுக சனநாயகம்
   ii) சட்டரீதியான கடமைகள், பண்பாட்டு ரீதியான கடமை
   iii) மத்திய அரசிடமுள்ள நிர்வாக அதிகாரங்களுல் சிலவற்றை பிராந்திய அலகுகளிடம் கையளித்தலாகும்.
   iv) அரசியல் அதிகாரம், சமூக அதிகாரம், பொருளாதார அதிகாரம்
   v) பொருளாதார பண்டம் - உணவு, ஆடை அணிகலனடகள்
   பொருளாதாரமல்லாத பண்டம் - சூரிய ஒளி, காற்று, நீர்
   vi) சிங்கள பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம்
   vii) முதலாளித்துவம், சமவுடமை, கலப்பு
   viii) நிலையான அபிவிருத்தி, தனிநபர் அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி
   ix) தனிநபர், இருநபர், சமூக குழுக்கள், நாடுகள்
   x) சூழ்நிலை, நடத்தை, மனப்பாங்கு

2. i) பேரசிரியர் கானா, அரிஸ்டோட்டில்
   ii) நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை
   iii) a) ஓர் இனத்துக்கு ஓர் அரசு என்ற கோட்பாடு

   b) நிலம், மக்கள், அரசாங்கம், இறைமை ஆகியோரு கூறுகளை கொண்ட உள், வெளி இறைமையைக் கொண்டிருத்தல்

3. i) சாதாரண பெரும்பான்மை, பிரதிநிதித்துவ முறை, விகிதாசார முறை
   ii) கபலகாட்சி முறை, இரு கட்சி முறை, ஒரு கட்சி முறை
   iii) a) மக்கள் தமது கருத்துக்களைப்பிரிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரித்தல்
   b) பொ.வி

4. i) பண்டுகாபய மன்னன் கிராம நிர்வாகத்துறைக்கு கம்பார, காமிபி போன்ற அதிகாரிகள்
பொலனறுவை காலத்தில் மகா பராக்கிரபாகு மன்னன் பிரதேச ஆட்சியாளர்களை நியமித்தல்
பிரித்தானிய ஆட்சியில் அதிகாரப்பரவலாக்கம்

ii) 1வது நிரல் - மாகாண சபைக்குரிய அதிகாரங்கள்
2வது நிரல் - மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள்
3வது நிரல் - இணைந்து நிறைவேற்று பணிகள்

iii) a) மாகாண சபையை கூட்டுதல், முடிவுறுத்தல், கலைத்தல்
மாகாண வபையின் கொள்கைகளை அனுமதித்தல்
மாகாண சபைகளில் உரையாற்றுதல்

b) பொ.வி.

5. i) அமைவிடம் தொடர்பான, குடிப்பெயர்வு, ஆக்கிரமிப்பு, வியாபார நோக்கம்

ii) பல்வேறு மொழி, இனம், மத நம்பிக்கையுடையவர்கள் வாழ்தல்
ஒரே இனமாக இருந்தாலும் பிரதெச ரீதியான வேறுபாடு காணப்படல்
ஒவ்வொரு கலாசாரத்துக்கும் உரித்தான பழக்கவழக்கங்கள், மரபுகள்

iii) a) தேசிய ஐக்கிய மற்றும் சகவாழ்வு நிலை விருத்தி முரண்பாடு தீர்க்கப்படுகின்றன. ஒரே தேசம், ஒரே ஒளி உணர்வு

b) பொ.வி.

6. i) நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி

ii) எதனை எந்தளவு உற்பத்தி செய்வது
எவ்வாறு உற்பத்தி செய்வது
யாருக்காக உற்பத்தி செய்வது

iii) a) உற்பத்தி, விநியோகம், நுகர்வு

b) பொ.வி.

7. i) இனப்பாகுபாடு, அரசியல் கருத்து முரண்பாடு, சமூக பொருதார நிலை

ii) சிறந்த செவிமடுப்பாளர்
நம்பிக்கையாளர்
அர்ப்பணிப்பு
நேர்மையானவர்

iii) a) சுய கௌரவம் பாதுகாக்கப்படும்
சமாதானம் பேணப்படும்
உயிராபத்தை தடுத்தல்
அரசியல் உறுதிப்பாடு

b) பொ.வி.



WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!